[2001 செப்டம்பர் 10

71—

கட்டட வசதி

***4512—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாடகைக் கட்டடத்தில் இயங்கும் திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்னும் எத்தனை வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடங்கள் இல்லை? அடுத்து, திருக்கழுக்குன்றம், எடப்பாடி போல எத்தனை ஊர்களிலே அரசுக் கட்டடங்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அவற்றை உடனடியாகக் கட்ட இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் வருவாய்த் துறை அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணிக்காக நிதிநிலைக்கேற்ப ஆண்டுதோறும் பகுதி-2, திட்டத்தின்கீழ் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 206 வட்டாட்சியர் அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 182 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. போடிநாயக்கனூர், தேனி, வேப்பந்தட்டை, பூந்தமல்லி,

2001 செப்டம்பர் 10]

பள்ளிப்பட்டு மற்றும் கிருஷ்ணாபுரம் ஆகிய ஆறு வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு 11-வது நிதிக் குழுவின் மானியத் தொகையிலிருந்து கட்டடம் கட்டுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள திருக்கழுக்குன்றம் உள்ளிட்ட இதர 18 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடம் கட்டும் பணி அரசின் நிதிநிலைக்கேற்ப மேற்கொள்ள வேண்டியிருப்பதால், திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அலுவலகம் கட்டடம் கட்டும் பணி அரசின் நிதிநிலைக்கேற்ப மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அலுவலகங்கள் இயங்கும் பல சொந்தக் கட்டடங்கள் damage ஆகியிருக்கின்றன. அவற்றிற்கு வேறு வருமானமும் இல்லை. எனவே, எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.க்கள் நிதியிலேயிருந்து கட்டுவதற்கு அனுமதி அளிப்பது பற்றி அரசு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கருணாகரன், மாண்புமிகு அமைச்சரால் வட்டாட்சியர் அலுவலகத்திற்குத்தான் பதில் தர முடியும். ஒன்றிய அலுவலகத்தைப் பற்றிக் கேட்டால் அவரிடம் பதில் இருக்காது.

வினா எண் 72, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி தள்ளிவைக்கப்படுகிறது.

வினா எண் 73, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

73—

கால்நடை மருத்துவமனை

***3401—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், 2-வது தொகுதி, செட்டிசாவடிப் பகுதியில் நடப்பாண்டில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS